**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 107/2018**

**வாதி தரப்பு சாட்சி-1 முருகவேல் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) நான் புதிதாக கட்டியுள்ள வீட்டிற்கு கிழபுறம் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. ரோட்டிற்கு கிழபுறம் சர்வே எண் 1555/1 ல் 4 ஏக்கர் 2 சென்ட் நிலம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நிலத்தை கிழமேல் பொழி போட்டு வடபுறம் எனது தகப்பனாருக்கும், தென்புறம் கொண்டமநாயக்கருக்கும், அதற்கு தென்புறம் பெருமாள் நாயக்கருக்கும், அதற்கு தென்புறம் தம்மாநாயக்கருக்கும் பிரிக்கப்பட்டு அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. சுமார் 60 வருடத்திற்கு முன்பே மேற்படி நிலங்கள் பிரிக்கப்பட்டு, தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண் 1571/6 மற்றும் 1574/3 தம்மாநாயக்கர் பெயரில் தனியாக பட்டா எண் 490 உள்ளது என்றால், அது எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துதான். எனது பெரியப்பா பண்ணையம் செய்ததால் அவர் பெயரில் தனியாக பட்டா மாற்றிக் கொண்டார். சர்வே எண் 1571/6 ல் தம்மாநாயக்கர் தனியாக ஒரு ஆழ்துளை கிணறு போட்டுள்ளாரா என்றால், அனைவரும் சேர்ந்துதான் போட்டுள்ளோம்.

2) ஆழ்துளை கிணறுக்கான மின்இணைப்பு தம்மாநாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தம்மாநாயக்கர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் பெயரில் மின்இணைப்பு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கெனவே தனியாக அவரவர் பெயரில் பிரிக்கப்பட்டு பட்டா பெற்ற நிலங்களை இவ்வழக்கில் காட்டிவிட்டு, நான் கிரையம் பெற்ற சொத்தை இவ்வழக்கில் சேர்க்காமல் பகுதியாக பாகபிரிவினை கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கெனவே குடும்ப சொத்துக்கள் அனைத்தும் 60 வருடங்களுக்கு முன்பே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றும், அவரவர் பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றும், மேற்படி விபரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**